பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 10 2025 SUNDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தொகுதி பங்கீட்டினை தேசிய ஜனநாயக கூட்டணி இறுதி செய்துள்ளது. பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதாதளம் தலா 101 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

2. உழவர் உற்பத்திக்குழுக்களில் 52 லட்சம் விவசாயிகள் இணைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சத்தீஸ்கரில் அதிரடிப்படையினருக்கான பயிற்சி மையத்தை ஏற்படுத்த மத்திய ரிசர்வ் காவல்படை திட்டமிட்டுள்ளது.

4. ஆப்கானிஸ்தான் நடத்திய பதிலடி தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த 58 ராணுவத்தினர் உயிரிழந்தனர்.

5. உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற 331 ரன் என்ற இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தொகுதி பங்கீட்டினை பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இறுதி செய்துள்ளது.

இதன்படி, பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதாதளம் தலா 101 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

ராம்விலாஸ் LJP-க்கு 29 தொகுதிகளும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா மற்றும் இந்துஸ்தானி அவாம் மோர்ச்சாவுக்கு தலா 6 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 6 மற்றும் 11-ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

அனைத்துத்தரப்பினருக்கும் நீதி எளிதாக கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு B R Gavai கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் ரத்னகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட Mandangad-ல் சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்திற்கான கட்டிடங்களை இன்று திறந்துவைத்து அவர் பேசினார்.

இந்த வளாகம் நவீன வசதிகளை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நீதித்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மகாராஷ்ட்ரா அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பாராட்டுதலுக்குரியது என்றும் திரு B R Gavai கூறினார்.

<<<<<<>>>>>>

உழவர் உற்பத்திக்குழுக்களில் 52 லட்சம் விவசாயிகள் இணைந்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உழவர் உற்பத்திக்குழுக்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

இக்குழுக்களின் ஒட்டுமொத்த பரிவர்த்தனை 15 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், விளைப்பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதை உறுதி செய்வதற்கும் இந்த உழவர் உற்பத்திக்குழுக்கள் பணியாற்றி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

போதைப்பொருள் இல்லா இந்தியாவை உருவாக்குவதற்கான இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்றைய தினம் மட்டும் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் இந்த இயக்கத்தில் பங்கேற்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டதாக கூறினார்.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கரில் நெல் கொள்முதல் நடவடிக்கைகள் அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல் தொடங்கும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் கூறியுள்ளார்.

இன்று ராய்பூரில் இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலை ஆய்வுக்கூட்டத்தில் தலைமை வகித்து அவர் பேசினார்.

நெல் கொள்முதல் நடவடிக்கைகள் வெளிப்படையாக நடைபெறுவதை உறுதி செய்யுமாறும் அவர் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தினார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தில் தகுதி வாய்ந்த அனைத்து விவசாயிகளும் இணைந்து பயன்பெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு விஷ்ணு தியோ சாய் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

சத்தீஸ்கரில் அதிரடிப்படையினருக்கான பயிற்சி மையத்தை ஏற்படுத்த மத்திய ரிசர்வ் காவல்படை திட்டமிட்டுள்ளது.

நக்சலைட் பிரச்சினையால் கூடுதலாக பாதிக்கப்பட்ட *Karregutta* வனப்பகுதியில் இந்த பயிற்சி பள்ளியை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர் திரு *Sujan Chakraborty* குற்றவாளிகள்தான் பாதுகாப்பாக இருப்பதாக குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, விடுதிகளில் தங்கியுள்ள மாணவிகள் குறிப்பாக இதர மாநிலங்களை சேர்ந்த மாணவிகள் இரவு நேரங்களில் வெளியே செல்வதை தவிர்க்குமாறு மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்குவங்க முதலமைச்சரின் இந்த கருத்துக்கு பிஜேபி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பெண் முதலமைச்சராக இருந்தபோதிலும், செல்வி மம்தா பானர்ஜி பெண்களுக்கு எதிரான கொள்கைகளை கடைபிடிப்பதாக பிஜேபியின் செய்தித்தொடர்பாளர் திரு *Pradeep Bhandari* கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பாதிக்கப்படுபவர்களை குற்றம் சாட்டும் வகையில் கருத்துக்களை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்றார்.

<<<<<<>>>>>>

ஆப்கானிஸ்தானின் தாலிபான் படையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் பாகிஸ்தானை சேர்ந்த 58 ராணுவத்தினர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத்தை சேர்ந்த 25 பேர் சிறை பிடிக்கப்பட்டுள்ளதாகவும், ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆப்கானிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

எல்லையையொட்டிய ஏழு பகுதிகளில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தற்போது அந்த பகுதிகள் ஆப்கானிஸ்தானின் முழு கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை வெளியேற்ற அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆப்கானிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

*உத்தராகண்டில் பத்திரிகையாளர் நல வாரியத்திற்கான நிதி ஒதுக்கீடு 5 கோடியிலிருந்து 10 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தமி கூறியுள்ளார்.*

*டேராடூனில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பத்திரிகையாளர்களின் நலன்களை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாக கூறினார்.*

*மாநில அரசின் பல்வேறு திட்டங்களை பெறுவதற்கு பத்திரிகையாளர்கள் தகுதிவாய்ந்தவர்களாக தற்போது அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

*ஆஸ்திரேலியாவுடனான கூட்டு ராணுவ பயிற்சியல் பங்கேற்பதற்காக இந்திய ராணுவத்தினர் பெர்த் சென்றடைந்தனர்.*

*120 பேரை கொண்ட இந்த குழுவினர் நாளை முதல் கூட்டு ராணுவ பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.*

*வரும் 26-ஆம் தேதி வரை இந்த கூட்டு ராணுவ பயிற்சி நடைபெறவுள்ளது.*

*இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெறவுள்ளது.*

*<<<<<<>>>>>>*

*நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

ஆந்திரா, கேரளா, கர்நாடகா, ஒடிஷா மற்றும் தமிழகத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், நாகலாந்து, மணிப்பூர், மிசோரம் தெலங்கானா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த சில தினங்களுக்கு பலத்த காற்றுடன் மழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா வெற்றிபெற 331 ரன் என்ற இலக்கினை இந்தியா நிர்ணயித்துள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 48 புள்ளி ஐந்து ஓவரில் 330 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

Smriti Mandhana அதிரடியாக ஆடி 66 பந்துகளில் 80 ரன் குவித்தார்.

-------------------

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஃபாலாஆனை பெற்று இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் வெஸ்ட் இன்டீஸ் ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்பிற்கு 173 ரன் எடுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், John Campbell 87 ரன்னுடனும், Shai Hope 66 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, 4 விக்கெட் இழப்பிற்கு 140 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்சை தொடர்ந்து ஆடிய வெஸ்ட் இன்டீஸ் 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

குல்தீப் யாதவ் அபாரமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியா முதல் இன்னிங்சில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

------------

ஆசிய Triathlon பாரா சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஆஷிஷ்குமார் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் Chiba-வில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

------

ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 11-7, 11-1, 11-5 என்ற செட் கணக்கில், எகிப்தின் Rana Ismail-ஐ வென்றார்.

-----------

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று 4-2 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வென்றது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியாவின் Roshan Kujur, Arshdeep Singh, Araijeet Singh, Sunil ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

------------

துருக்கி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹரிஹரன் – *Treesa Jolly* இணை பட்டம் வென்றது.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, *21-14, 18-21, 21-11* என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் *Nawaf – Nahya Muhyifa* இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் – ஹரிஹரன் இணையும், *21-13, 21-6* என்ற செட் கணக்கில், ஜப்பானின் *Shuyna Ota – Yuto Noda* இணையை வென்று பட்டத்தை கைப்பற்றியது.

<<<<<<END>>>>>>